

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தண்ணீரை திறந்து வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் சி.எஸ்.ஆர் திட்டம் 2024–25 நிதியில் ரூபாய் 83.65 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்களை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வழங்கினர். இதில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், உடுமலை நகர கழக செயலாளர் செ.வேலுசாமி, உடுமலை நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின், உடுமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.கே.எம்.தங்கராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், பவர்கிரிட் பொது மேலாளர் அவினாஷ், தலைமை மருத்துவர் கலைச்செல்வி, வருவாய் கோட்டாட்சியர் உமர் உள்பட நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### இந்தியா உலகின் முன்னணி நாடாக ரசாயன தொழிற்துறையில் உருவெடுக்கும் திறன் கொண்டுள்ளபோது

# ரசாயன தொழில் துறையில் தொடரும் இறக்குமதி சார்புக்கு காரணங்கள் என்ன?

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30 –

இந்தியா உலகின் முன்னணி நாடாக ரசாயன தொழிற்துறையில் உருவெடுக்கும் திறன் கொண்டுள்ளது. இருப்பினும் ரசாயன தொழில் துறையில் தொடரும் import dependencyக்கு (இறக்குமதி சார்பு) காரணங்கள் என்ன?



இந்திய ரசாயன தொழிற் துறையில் குறிப்பாக MSME களுக்காக, இறக்குமதி சார்பை குறைத்து உலகளாவிய போட்டித்திறனை உயர்த்துவதற்காக, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) ஆதரவு, Global Value Chain Integration Support, Technological Upgradation (தொழில்நுட்ப மேம்பாடு) மற்றும் Process Efficiency (செயல்முறை திறன் அதிகரிப்பு) ஆகியவற்றை மேம்படுத்த அரசு மேற்கொண்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

(Global Valuc Chain Integration Support MSMEகள் உலகளாவிய வாடிக்கையாளர்களுக்குப் பொருட்கள் வழங்க, சர்வதேச தரப்படுத்தல், தொழில்நுட்ப மேம்பாடு போன்றவை மூலம் ஆதரவு என்ன என்று மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

**ஒன்றிய அரசின் பதில் :** இந்தியாவில் ரசாயனத் துறையில் இறக்குமதி சார்பிற்கான காரணங்கள் மூலப் பொருட்களின் பற்றாக்குறை, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க முயற்சிகளின் குறைபாடு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆதரவு (Research and Development Support), உலகளாவிய மதிப்புச்சுழற்சி ஒருங்கிணைப்பு (Global Value Chain Integration Support), தொழில்நுட்ப மேம்பாடு (Technology Upgradation), செயல்முறை திறன் அதிகரிப்பு (Process Efficiency) மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களையும் (MSME) ஊக்குவிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு: உயர்திறன் மையங்கள் (Centres of Excellence),

ரசாயன மற்றும் பெட்ரோ ரசாயனத் துறை யில் புதிய மூலக்கூறுகள் (Molecules) மற்றும் தொழில்நுட்பங்களை உருவாக்கும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கத்தில் ரசாயனத் துறை முக்கிய உயர்திறன் மையங்களை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங் களுக்கு உதவித்தொகை (Grantsin aid) வழங்குவதன் மூலம் தற்போதுள்ள தொழில்நுட்பங்கள், பாலிமர்கள் (Polymers), ரசாயனங்கள் மற்றும் பிளாஸ்டிக்கை மேம்படுத்தவும் மற்றும் புதிய பயன்பாடுகளை உருவாக்கவும் உதவுவதாகும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சம் தற்போதுள்ள உற்பத்தி செயல்முறைகளை நவீன மயமாக்குதல் & மேம்படுத்துதல் மற்றும் தயாரிப்புக'ளின் தரத்தை உயர்த்துதல். இந்த திட்டத்தின் கீழ் இந்திய அரசு மொத்த திட்டச் செலவின் 50% வரை நிதி உதவியாக வழங்குகிறது. அதிகபட்சமாக (ரூபாய் 5 கோடி வரையிலான வரம்புடன்) தற்போது வரை இந்தத் திட்டத்தின் கீழ் 18 உயர்திறன் மையங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இம் மையங்களை தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த மையங்களில் IITS, CSIR ஆய்வுக்கூடங்கள், CIPET உள்ளிட்டவை அடங்கும்.

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR):

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR) அதன் ஆறு துணை ஆய்வகங்கள் மூலம் இந்தியாவின் ரசாயனத் துறையை பலப்படுத்தும் பணியில் முக்கியப் பங்காற்றி வருகிறது. இத்துறை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), தொழில்நுட்ப மேம்பாடு, செயல்திறன் உயர்வு ஆகியவற்றில் ஆதரவளிக்கிறது. CSIR நிறுவனங்கள் மற்றும் (Start ups) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் நேரடி ஒத்துழைப்பில் ஈடுபட்டு, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகின்றது. CSIR இதுவரை பல இறக்குமதி சார்பைக் குறைக்கும் தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக Medical Grade Oxygen, Biodiesel, Renewable BioMethane, And Eco Friendly Processing Systems. Specialty Chemicals, Battery Recycling, Corrosion And Crop Protection Techno logies களின் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் CSIR, தொழில்துறைத் தேவைகளுக்கான AI சார்ந்த தொழில் துறை தீர்வுகள் மற்றும் Carbon Capture தொழில்நுட்பங்களை ஆய்வு செய்து வருகிறது. CSIR தொழில்துறை பங்குதாரர்களுடன் தொடர்பை மேம்படுத்தும் நோக்கில் வழக்கமான Workshops மற்றும் Outreach Programs, ஆகியவற்றையும் நடத்தி வருகிறது. இதன் மூலம், Climate Change, Energy Security மற்றும் Supply Chain Disruptions போன்ற முக்கிய சவால்களை அணுகும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயோ டெக்னாலஜி துறையானது பயோ தயாரிப்பு முறைகளை ஊக்குவிக்கும் நோக்கில் "BioE3" என்ற கொள்கையை (Biotechnology for Economy, Environment & Employment) அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, ரசாயனத் துறைக்குள் நிலையான பயோ தயாரிப்புக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை (R&D) ஆதரிக்க பயோடெக்னாலஜி துறை முன்மொழிவுகளை (Proposals) வரவேற்கின்றது. இந்த அழைப்பின் முக்கியக் கவனம் , Bio Manufacturing Of BioBased Chemicals, Biopolymers And Active Bharmaceutical Ingredients (APIs) ஆகியவற்றை Production Strains பயன்படுத்தி உருவாக்கும் பயோ தயாரிப்பு முறைகளில் உள்ளது. இந்த முயற்சியில் கல்வி நிறுவனங்கள், Startups, தொழில் நிறுவனங்கள், பங்கேற்க ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த முயற்சியின் முக்கிய நோக்கம், இந்த துறையில் உயர் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிப்பதும் வணிகமயமாக்கலும் ஆகும்.

MSME அமைச்சகம் : சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) அமைச்சகம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) வளர்ச்சியை ஊக்குவித்தல், MSMEக்களை உலகளாவிய மதிப்புச் சுழற்சியில் இணைத்தல் (Global Value Chains), தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் செயல்திறன் மேம்பாட்டையும் ஊக்குவித்தல் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் செயல்படுத்தி வருகிறது, குறிப்பாக ரசாயனத் துறைக்குள் MSME Champions Schemeஇன் கீழ் மூன்று முக்கிய துணைத் திட்டங்கள் உள்ளன:

MSME Innovative (Incubation, Design & IPR) Scheme ஆராய்ச்சி மற்றும் புதுமை நடவடிக்கைகளை ஆதரிக்கிறது.

MSME Competitive (LEAN Manufacturing Scheme) LEAN நடைமுறைகள் மூலமாக உற்பத்தித்திறன் மற்றும் தர மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.

MSME Sustainable (ZED Zero Effect Zero Defect) Certification Scheme சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாத மற்றும் குறைபாடில்லா தரமான உற்பத்தியை ஊக்குவிக்கிறது.

மேலும், கீழ்க்காணும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன,

MSE Scheme for Promotion and Investment in Circular Economy (MSESPICE) Circular பொருளாதாரத்தை முன்னேற்றும் முயற்சிகளை ஆதரிக்கிறது.

Micro and Small Enterprises Growth Innovation and Technolo gy (MSE GIFT) Scheme குறிப்பாக ரசாயனத் துறையில் செயல்படும் MSMEக்களின் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் செயல்திறன் உயர்வை ஊக்குவிக்கிறது என்று ஒன்றிய அமைச்சர் கூறினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா, திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் கோட்டைமேடு வின்செண்ட் சாலையில் துணை அமைப்பாளர் சி.எம்.எஸ். மசூது ஏற்பாட்டில், மாவட்ட அமைப்பாளர் இரா.தனபால் தலைமையில், துணை அமைப்பாளர் கோவை அருண் வரவேற்புரையில் மாநகர் மாவட்ட கழக துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், கோட்டைமேடு பகுதி பொறுப்பாளர் வி.ஐ.பதுருதீன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே.பி. திருமலைராஜா, க.மணிகண்டன், துரை பிரவீண், லாரா பிரேம் தேவ், 82வது வட்ட கழகச் செயலாளர் ஏ.அப்பாஸ் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கழக மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, கழக இளம் பேச்சாளர் வழக்கறிஞர் ம.மோகநிதி சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட துணை செயலாளர் கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர்கள் பி.நாச்சிமுத்து, மு.இரா.செல்வராஜ், தெற்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர்.மகேந்திரன், கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல் உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்டத்தில்

# 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் தொடர்பான ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – அரசு கொறடா கா.ராமச்சந்திரன் பங்கேற்பு!

உதகை, ஜூலை 30 –

நீலகிரி மாவட்டத்தில், நடைபெற்று வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம், மற்றும் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக்கூட்டம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர்; திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம்; அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் மற்றும் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக்கூட்டம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடனுதவிகள் குறித்தும், முதல்;;வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் சாலை பணிகள் குறித்தும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் குறித்தும், கூட்டுறவுத்துறை சார்பில் வழங்கப்பட்டுள்ள பயிர்க்கடன் குறித்தும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் குறித்தும், வேளாண் இயந்திர மயமாக்குதலுக்கான துணை இயக்க திட்டம் குறித்தும், தமிழ்ப் புதல்வன் மற்றும் புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவங்கப்படும் என அறிவித்திருத்தார். அதன்படி அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டத்தினை,

முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. மேலும், 'உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. இம்முகாமானது 15.07.2025 முதல் அக் டோபர் 2025 மூன்று கட்டங்களாக நடைபெற இருக்கிறது. இம்முகாமில், அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது கனிவுடன் பரிசீலனை செய்து 45 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், ஏற்கனவே நமது மாவட்டத்தில் உதகை மற்றும் கூடலூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து, இன்றைய தினம் குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், கட்டப்பட்டு வரும் புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்களை விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோல் பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மழைகாலத்திற்கு முன்பாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அரசால் வழங்கப்படும் நிதியினை சரியான முறையில் செலவு செய்திடும் வகையில்; திட்டமிட்டு உரிய காலத்திற்குள் வளர்ச்சி திட்ட பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பொதுமக்களின் அடிப்படை வசதிகளான சாலை உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அவர்கள், அரசு தலைமை கொறடா அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில், தமிழ்நாடு அமைப்புச்சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற, பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ ரிக்ஷா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கவும்;, வருமானம் ஈட்;டும் திறன் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கில் 3 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தலா ரூ.4 இலட்சம் மதிப்பில் (தலா ரூ.1 இலட்சம் மானியம்) புதிய ஆட்டோ ரிக்ஷா வாகனத்திற்கான சாவிகள் மற்றும் நிர்வாக அனுமதி ஆணைகளை வழங்கினார்.

அதனை தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாதனைகள்; குறித்த நான்;காண்டு சாதனை மலரினை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ். நிஷா மாவட்ட வன அலுவலர் கௌதம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கௌர், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, மகளிர் திட்ட அலுவலர் மரு.ஜெயராமன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திருமதி ஷிபிலாமேரி, நகராட்சி ஆணையாளர்கள் மோகன் (கோத்தகிரி), இளம்பரிதி (குன்னூர்), தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய உறுப்பினர் மு.பொன்தோஸ், கோத்தகிரி நகர் மன்ற தலைவர் திருமதி ஜெயக்குமாரி, நகர்மன்ற துணைத்தலை வர்கள் திரு.ரவிக்குமார் (உதகை), வாசிம்ராஜா (குன்னூர்), சுற்றுலாத் துறை அலுவலர் திருமதி துர்கா தேவி, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) நந்தகுமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உதவி செயற் பொறியாளர் திருமதி சங்கீதா, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி பிரவீணா தேவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.




கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை அரிசிபாளையம் ஊராட்சி தொப்பம்பாளையத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணி, அரிசிபாளையத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 51 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணி, மலுமிச்சம்பட்டி ஊராட்சி பொது நிதியின் மூலம் ரூபாய் 35 இலட்சத்து 42 ஆயிரம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணியினை கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தனர். இதில் ஒன்றிய கழக செயலாளர் விஜய்சேகரன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தாழை மு. கருணாநிதி
### ஜூலை 30 (1986)



இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். தமிழக சட்டப்பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினராக மக்களின் மகத்தான ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

"மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கே அதிக வாய்ப்புத் தரவேண்டும் என்பது எனது ஆசை! எனது சொந்த மாவட்டத்திலேயே அந்த ஆசை தாழை மு. கருணாநிதி மூலம் நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு தாம் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை தாழை தமது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.